மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பெரியசாமி அவர்கள் தந்தை பெரியார் அவர்களைப் பற்றிப் பெருமையாகப் பேசினார்கள். அதை நான் அப்படியே ஏற்றுக் கொள்ளுகின்றேன். அவர் பெரியார் மாவட்டத்திலே குறிப்பாக ஈரோட்டிலே இந்த மாநாட்டை நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். ஆகவே, போகிற போக்கைப் பார்த்தால் எல்லா உறுப்பினர்களும் தங்கள் ஊரிலே நடத்த வேண்டுமென்று கேட்பார்கள் என்று நான் நினைக்கிறேன். ஆகவே, அப்படிக் கேட்பதாக வைத்துக் கொண்டு எல்லா ஊர்களைப் பற்றியும் அந்த ஆலோசனைக் கூட்டத்திலே பரிசீலிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லா ஊர்களைப் பற்றியும் பரிசீலிக்கிறோம் என்று அமைச்சர் சொல்லிவிட்டார். எனவே, மற்றவர்களெல்லாம் கையைக் கீழே போடலாம். (சிரிப்பு)

வினா எண் 283 திரு. என். ஆர். சிவபதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

283

மாவட்டத் தலைமை அரசு மருத்துவமனைகளில் தடய அறிவியல் ஆய்வகம்

*9326 *திரு. என். ஆர். சிவபதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களில் உள்ள தலைமை அரசு மருத்துவ மனைகளில் தடய அறிவியல் ஆய்வகம் (Forensic Science Laboratory) அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது செயல்படத் துவங்கும்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை

திரு. என். ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களில் உள்ள தலைமை அரசு மருத்துவமனைகளில் இந்தத் தடய அறிவியல்

1993 ஏப்ரல் 8]

ஆனால், இபபோது 3 அல்லது 4 மாவட்டங்களுக்கு, ஒரு தலைமை மருத்துவமனையில்தான் அறிவியல் தடய ஆய்வகம் இருக்கிறது. இதனால், அந்த மருத்துவச் சான்றிதழ் பெறுவதற்குக் காலதாமதம் ஏற்படுகிறது. இதனால், பல வழக்குகள் கூட நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. ஆகவே, அந்தந்த மாவட்டத்திலுள்ள தலைமை மருத்துவமனையிலேயே ஒரு தடய அறிவியல் ஆய்வகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற யோசனை நல்ல யோசனைதான். ஆனால், ஒவ்வொரு மாவட்டத்திலேயும் அமைகிறபோது, அதற்குத் தேவையான p.c. அளவிற்குப் பணி இருக்காது. Work load இருக்காது. ஏதோ சில வழக்குகள் அது போன்ற கேஸ்கள் மட்டும் வரும் என்ற காரணத்தினால், ஒவ்வொரு மாவட்டத்திலேயும் அமைப்பதிலே பயன் இருக்காது. எனவேதான், 4 மண்டலங்களாகப் பிரித்து, 4 மண்டலங்களிலும் உள்ள ஒரு தலைமை மருத்துவமனையிலே இந்த லேபரேட்டரியை வைத்திருக்கிறோம். அங்கே போய், விரைவாக அந்த ரிசல்ட் கிடைப்பதற்கான நடவடிக்கை இந்த அரசு எடுத்திருக்கிறது. எவ்வளவு விரைவாக அந்த ரிசல்ட் கிடைக்க முடியுமோ அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லி, அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

திரு. என். ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், Work load-க்குத் தகுந்தமாதிரி அந்தந்தப் பகுதிகளில் இந்த ஆய்வகம் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால், இன்றைக்கு நிறைய வழக்குகள், மருத்துவ சான்றிதழ் இல்லாமல், நிலுவையில் இருக்கின்றன. அதோடுமட்டுமல்லாமல், இந்த மருத்துவச் சான்றிதழைப் பெறுவதற்கு ஏதுவாக ஒரு காவல்துறை அதிகாரியை நியமித்து, அந்த ரிப்போர்ட்டை வாங்குகிற அளவுக்கு அவர்கள் அங்கேயே இருந்து பெற வேண்டியிருப்பதால், காலதாமதம் ஆகிறது. இதனை மனதில் கொண்டு, போலீஸ் துறைக்கும் அதிக சிரமம் இல்லாமல், அதோடு மருத்துவச் சான்றிதழ் பெறுவதற்கு ஏதுவாக ஒன்று அல்லது இரண்டு மாவட்டங்களை இணைத்து ஏதாவது ஒரு மாவட்டத்திலே அந்த அறிவியல் ஆய்வகம் அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கிற மாவட்டங்களை அனைத்தையும் 4 பிரிவுகளாகப் பிரித்து, 4 மண்டலங்களாக இப்போது வைத்திருக்கிறோம். இதிலே எந்த மாவட்டத்திலே அதிக வேலை இருக்கிறது என்பதைப் பார்த்து, எதிர்காலத்திலே, நிதி நிலைமைக்கேற்ப விரிவாக்க முடியுமா என்பதைப் பற்றி ஆலோசிக்கலாம். ஆனால், இப்போது இருக்கிற நிலைமையிலே இந்த மண்டலப் பிரிவுகளையே வைத்துக் கொண்டு, வேகமாக விரைவாக அந்த ரிசல்ட் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் அ. ஸ்ரீதரன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுபவ ரீதியாகப் பார்க்கிறபோது, இக்கேள்வி மிகவும் முக்கியமான கேள்வி. மருத்துவம் படிக்கிற மாணவர்கள் கூட Forensic Scince Laboratory என்று சொல்லக்கூடிய அந்த நிறுவனத்தினுடைய Advance Technology யைத் தெரிந்து கொள்ள வாய்ப்பு இல்லாத காரணத்தால், நம்முடைய நிதிநிலை நெருக்கடியையும் பார்க்கிறபோது, 4 மண்டலங்களாகப் பிரித்து இருக்கிற இந்த நிலைமையை மாற்றி, சுமார் 6 அல்லது 7 மண்டலங்களாகப் பிரித்து, அவற்றிலே அரசு மருத்துவக் கல்லூரிகளிலே மாணவர்கள் பயிலுகிற வகையிலே செய்வதற்கும், அதேபோல், அந்த வழக்குகள் தேங்கிக் கிடக்காமல் இருப்பதற்கும் ஒரு சீர்திருத்த முறையை ஆய்வு செய்வதற்கு அனைத்து மருத்துவ வல்லுநர்களையும் அழைத்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னபடி Work load எங்கெங்கே இருக்கிறதோ, அந்தந்த இடத்திலே மட்டும் அமைப்பதற்கான நடவடிக்கையை எதிர்காலத்திலே எடுக்க முடியுமா என்பதைப் பற்றி ஆய்வு செய்யலாம். நான் முடியும் என்று சொல்லவில்லை. காரணம் நிதிநிலை குறுக்கே இருக்கிறது. எனவே, அதைப்பற்றி ஆய்வு செய்யலாமேயொழிய இப்போது அதற்கான முடிவு எடுக்க முடியுமென்று சொல்ல முடியாது. மற்றொன்று, ஏற்னெவே இருக்கின்ற 4 மண்டலங்களில், 3 மண்டலங்களிலே, ஏற்கெனவே அரசு கல்லூரிகளினுடைய மருத்துவ மனைகளிலேதான் அது இயங்கி வருகிறது. ஆனால், எல்லாக் கல்லூரிகளினுடைய மருத்துவமனைகளிலும் இதை அமைப்பதற்கான நடவடிக்கை இப்போது ஒன்றும் நம் ஆய்விலே இல்லை. ஆனால், அத்தனை மருத்துவக் கல்லூரிகளிலேயுள்ள மருத்துவ மனைகளிலும் அது அமைக்கப்பட்டாலுங்கூட, மாணவர்கள் அதிலே போய்ப்படிக்கிறார்களா என்பதிலே எனக்கு ஒரு ஐயம் இருக்கிறது. யாரும் அதற்காக, இப்போது

[1993 ஏப்ரல் 8]

லேபரட்டரிக்காக 'போஸ்ட்' செய்யப்படுவதில்லை என்பது எனக்குத் தெரிந்த உண்மை என்று கருதுகிறேன். எனவே, இதனால் மாணவர்களுக்கு தனிப்பட்ட முறையிலே எந்தத் துறையிலே பயில வேண்டுமென்று கருதி போவார்களே தவிர, மற்றபடி இது அவர்களுக்கு நேரடியாகப் பயன்படாது என்றே கருதுகிறேன். எனவேதான், அதன்காரணமாக மாணவர்களுக்கு எந்த இழப்பும் ஏற்பட்டு விடாது என்றும் நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 284 டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

284—

டாம்ப்கால் நிறுவனத்திற்காக மூலிகைப் பண்ணை ஏற்படுத்தல்

*10111 டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசின் Tampcol நிறுவனத்திற்கு மூலிகைப் பண்ணை ஏற்படுத்த அனுமதித்து உள்ளதால் அந்நிறுவனத்தில் உள்ள அரசு மருந்தாளுநர்களுக்குப் பயிற்சிக் கொடுத்து, வரும் ஆண்டில் அரசு மூலிகைப் பண்ணைகளை ஏற்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருந்தாளுநர்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, B. Pharm மற்றும் D. Pharm படித்த வேலையில்லா பட்டதாரிகளின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் வண்ணம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த 'இல்லை' என்ற பதிலை மாற்றி மறு பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.20

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை என்பது எவ்வளவு பேர் படித்து இருக்கிறார்களோ அவ்வளவு பேர்களுக்கும் நாம் வேலை கொடுத்துவிட முடியாது. அவர்களுக்கு வேலை கொடுக்கின்ற முறையிலே எவ்வளவு தேவையோ அந்த அளவுக்குத்தான் கொடுக்க முடியும். எனவே அவர்களுக்கு அரசுப் பணிக்காக நாம் இடத்தை ஏற்படுத்திக் கொடுக்கிற அளவிலே நிச்சயமாகச் செய்ய முடியாது. அதிலே நிதிப் பிரச்சினையும் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும்